2010 ஏப்ரல் 28]

அந்தக் கோரிக்கை, வேறு எந்தத் திக்கிலிருந்தும் எனக்கு வரவில்லை. அப்படி ஒரு சூழ்நிலை உருவானால், அதுபற்றி அரசாங்கம் சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 113, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

113—

பணிமனை

***106088—திருமதி ஆர். பிரேமா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அவினாசி தொகுதி, அவினாசிக்கு 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருப்பூரில் 2 பணிமனைகளும் மற்றும் 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கருமத்தம்பட்டியில் ஒரு பணிமனையும் இயங்கி வருவதால், அவினாசி தொகுதி, அவினாசியில் பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா.

திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், அவினாசியில் போக்குவரத்துப் பணிமனை இல்லாததால் பேருந்துகள் பழுது மற்றும் பராமரிப்பு ஆகிய பிற காரணங்களால் பேருந்துகள் நின்றுவிட்டால், மாற்றுப் பேருந்துகள் வருவதற்குள் கால விரயமாகிறது. பயணிகள் மன உளைச்சல் காரணமாக, மிகுந்த சிரமப்படும் சூழ்நிலை உள்ளது. ஆகவே, அவினாசி தொகுதியின் மையப் பகுதியில் பொதுமக்களின்

நலன் கருதி போக்குவரத்துப் பணிமனை அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி வழியாக 36 நகரப் பேருந்துகள் கோவையை நோக்கித் தினந்தோறும் 410 நடைகள் செல்கின்றன, புறநகரப் பேருந்துகள் 110 எண்ணிக்கைகள், 551 நடைகள் செல்கின்றன. ஆக 961 நடைகள் கோவையை நோக்கிச் செல்கின்றன. ஒரு பேருந்து repair ஆகிவிட்டால்கூட, அடுத்த இரண்டாவது second-இல் அங்கே வண்டி நிற்கும். நான் சொல்வது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்து அல்ல. அவினாசிப் பகுதியிலே நிலம் என்ன விலை விற்கும் என்று உங்களுக்கே தெரியும். மேலும் 12 கிலோ மீட்டர், 13 கிலோ மீட்டர் தொலைவில் 3 பணிமனைகள் இருக்கின்றபொழுது மீண்டும் அங்கு ஒரு பணிமனை அமைக்கக்கூடிய அவசியம் ஏற்படுமா என்றுதான் துறை கருதுகிறது. இருந்தாலும், உறுப்பினர் சொல்லி இருக்கிறார். மேற்கொண்டு தேவையென்று ஆராய்ந்தறிந்தால் அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். பிரேமா.

திருமதி ஆர். பிரேமா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னூரிலிருந்து அவினாசி வரை இரவு 9-30 மணிக்கு மேல் பேருந்து சேவை இல்லை. அதனால் வணிகர்கள், பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். இந்தச் சிரமத்தைத் தவிர்க்க, இரவு 9-30 மணிக்கு மேல் அன்னூரிலிருந்து அவினாசி வரை கூடுதல் பேருந்து சேவையைத் தொடர, இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோவை மாநகரில் ஜவஹர்லால் நேரு

2010 ஏப்ரல் 28]

புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 300 புதிய பேருந்துகள் கோவைக்குத் தரப்பட்டு, கோவை மாநகரில் மட்டும் 170 பேருந்துகள் இயக்கப்பட்டு, மீதம் இருக்கின்ற 130 பேருந்துகள் புறநகரிலே கோவையிலிருந்து திருப்பூர், கோவையிலிருந்து ஈரோடு என்ற வகையிலே, கோவையை மையமாக வைத்து இயக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களேயானால், அந்தப் பகுதியைக் கவனித்து உடனடியாக அங்கு பேருந்து இயக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரியிலுள்ள அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனையானது வாடகைக் கட்டடத்திலே இயங்குகிறது. அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமான 2.25 ஏக்கர் நிலம் உள்ளது. ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்வாயிலாக நிதி ஒதுக்கியும், சட்டப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி பெற்றும், மேலும் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் நிதியும் வழங்கினால் அந்த இடத்தில் பணிமனை கட்டலாம். காரணம் ரூ.18,000 மாதம் வாடகை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். இடமும் இருக்கிறது, நிதி source-ம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து இந்த ஆண்டில் நிறைவேற்றுவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை நடைபெறவிருக்கும் மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பதில் இருக்கிறது. எனவே, நாளை வரை பொறுத்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.